# விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

## அந்தர்பல்டி அடிக்கும் டாக்டர் இராமதாஸ், அன்புமணிகள்!...




"அரசியலில் பொதுவாக இரட்டை வேடம் என்ற சொலவடை உண்டு. ஆனால் பாமகவைப் பொறுத்தவரை பல வேடங்கள் தரிப்பதில் சிவாஜி கணேசன், கமலஹாசன் கூடப் பிச்சை வாங்க வேண்டும் என்று விடுதலை ஏடு சுட்டிக்காட்டி எழுதி இருந்தது.

பா.ம.கவின் 25 ஆண்டு காலத் தொடக்கத்தை ஒட்டி வெளியிட்ட அறிக்கை (16.7.2013) இல் டாக்டர் இராமதாஸ் என்ன கூறினார் தெரியுமா? தேசிய கட்சிகள், திராவிடக் கட்சிகளுடன் இல்லாத கூட்டணி அமைப்போம் என்று கூறினார். அப்படி என்றால் பிஜேபி, தேசிய கட்சி இல்லையா? ம.தி.மு.க. திராவிடக் கட்சி இல்லையா? என்றெல்லாம் வினா எழுப்பியதுடன், திராவிடம் என்றால் கெட்ட வார்த்தை என்று சொன்னவர் தானே இராமதாஸ்; இப்போது அவர் கெட்டுப் போனது ஏன்!என்று விளக்கம் கேட்டு விமர்சனம் செய்து இருந்தது.

40க்கு மேற்பட்ட சாதிக் கட்சித் தலைவர்களை ஒன்று கூட்டி கூட்டணிஅமைப்போம் என்று சொல்லி விட்டு அவர்களைக் கழற்றி விட்டவர் தான் அவர். அரசியலில் நம்பகத்தன்மை அற்றவர் இராமதாஸ் என்றெல்லாம் அன்றைக்கு ஏடுகள் எழுதின...

"எதிர்க்கட்சித் தலைவராக இருக்க விஜயகாந்துக்கு எந்தவிதமான தகுதியும் கிடையாது; எந்தக் கொள்கையுமே இல்லாத கட்சி அது. 24 மணி நேரமும் ஒரு மெதப்பிலே இருக்குற ஒருத்தர், ஒரு கட்சிக்குத் தலைவராக இருந்தால், அப்புறம் அது விளங்குமா"... என்று கேட்டவர் தான் டாக்டர் இராமதாஸ் (ஆனந்த விகடன் பேட்டி. (01.08.2012, பக்கம் 33, 34) அத்தகைய விஜயகாந்தின் தே.மு.தி.க. தொண்டர்களிடமும் இப்பொழுது விக்கிரவாண்டி தேர்தலில் வாக்கு கேட்பது எப்படி நியாயம்?

2017 ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசின் மீதான ஊழல் பட்டியலை தனது முகநூலில் (27.04.2017) மருத்துவர் ஐயா இராமதாஸ் வெளியிட்டிருந்தார். "....எம்ஜிஆர் ஆட்சியில்தான் ஊழல்கள் சுனாமியாகப் பெருக்கெடுத்தது. 1996 ஆட்சிக்காலத்தில் மட்டும் ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சரவைச் சகாக்கள் மீது 33 ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஜெயலலிதா மீது மட்டும் 12 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு: தொலைக்காட்சி பெட்டி ஊழல் வழக்கு, டான்சி ஊழல், வெளிநாட்டு பரிசு ஊழல், பிறந்தநாள் பரிசு வழக்கு, வருமானவரி வழக்கு, கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே வழக்கு, நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கு, கிரானைட் குவாரி ஊழல் வழக்கு, ஸ்பிக் ஊழல் வழக்கு, ஸ்பிக் பங்கு விற்பனை ஊழல், ரூபாய் 66.65 கோடி சொத்து குறிப்பு வழக்கு, தெற்காசிய விளையாட்டுப் போட்டி விளம்பர ஊழல் வழக்கு, ஹைதராபாத் திராட்சைத் தோட்ட வழக்கு இப்படியான அ.தி.மு.க.வின் மீது ஊழல் குற்றச்சாட்டு பட்டியல் வாசித்த பா.ம.க. நிறுவனர் இராமதாஸ், பின்பு அ.தி.மு.க. கூட்டணியில் சேர்ந்து அரசியல் பதிவு பெற நினைத்தார். அவர் நினைப்பில் மண்தான் விழுந்தது. இப்பொழுது மீண்டும் ஜெயலலிதா படத்தைப் போட்டு மாம்பழம் சின்னத்துக்கு வாக்கு கேட்பதை எந்த விதத்தில் அ.தி.மு.க.வினர் ஏற்றுக் கொள்வார்கள்? ஏமாற்று வித்தை அல்லவா?

"அ.தி.மு.க. ஓட்டுக்களைப் பெறப் பெரிய ஜெ. படம், தந்திர அரசியல் செய்வதாக பா.ம.க. மீது பாய்ச்சல்" எனத் தலைப்பிட்டுத் தினமலர் போன்ற ஏடுகள் படத்துடன் வெளியிட்டு விமர்சனம் செய்திருக்கின்றன. இத்தேர்தலில் பா.ம.க. நடத்தும் இரட்டை வேடம் எடுபடாது. அக்கட்சி படு தோல்வி அடைந்து மண்ணைக் கவ்வப் போகிறது என்பதைத் தான் காட்டுகிறது. அதற்காகத்தான் "ஜெயலலிதாவின் புகைப் படத்தைப் பெரிதாக அச்சடித்துத் தேர்தல் பிரச்சார நோட்டீஸ்களி லும் பிரச்சார மேடைப் பொதுக்கூட்ட இடங்களி லும், வைக்கப்பட்ட விளம்பரத் தட்டிப் பேனர்களிலும் போட்டு அ.தி.மு.க.வினருடைய வாக்குகளைக் கவரப் புது வேகத்தில் பா.ம.க. கூட்டம் இறங்கியுள்ளது.

**கவிஞர் தமிழ்தாசன்**

**தி.மு.க. தீர்மானக் குழு தலைவர்**



ஆனால், இதையெல்லாம் பார்த்துக் கொண்டு அ.தி.மு.க.வின் ஒற்றைத் தலைவன் நான்தான் என்று சொல்லிப் பூவோடும், பொட்டோடும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற எடப்பாடிகள், அரசியல் எதிர்காலத்தைக் கருதி இரகசிய கூட்டணி வைத்து மௌனமாக இருப்பது ஏன் என்று சொல்லத் தயாரா? அ.தி.மு.க. தலைவியின் படத்தை எப்படிப் போடலாம்? என்று வெளிப்படையாகக் கண்டிக்கத் தெம்பு, திராணியில்லாத எடப்பாடிகள், பா.ஜ.க., பா.ம.க.வுடன் இரகசிய கூட்டணி வைத்து மவுனமாகச் செயல்படுவது ஏன்? என்று அ.தி.மு.க தொண்டர்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அ.தி.மு.க கிளைச் செயலாளர், நிர்வாகிகள் பட்டியலை வைத்துக் கொண்டு நேரிலும் செல்பேசிகளிலும் தொடர்பு கொண்டு பேசுவதாக வருகிற தகவலைக் கண்டிக்கிற துணிவில்லை எடப்பாடிக்கு. காரணம் என்ன? பா.ஜ.க., பா.ம.க. கூட்டணி இன்னும் இரகசியமாகத் தொடர்கிறது என்று தானே அர்த்தம்! பாஜகவைவிட்டு நாங்கள் விலகி விட்டோம் என்று கோயபல்ஸ் பிரச்சாரம் செய்து வரும் முகமூடி அணிந்த எடப்பாடிகளின் வார்த்தைகளை எப்படி நம்புவார்கள் அ.தி.மு.க. தொண்டர்கள்?

நிதிநிலை அறிக்கை எப்படி என்று தயாரிக்கத் தெரியாத இவர்கள், "டயர் நக்கிகள் "என்று எடப்பாடியைக் கடுமையான கொச்சை மொழிகளால் கிண்டல் செய்தவர்தானே இந்த அன்புமணி இராமதாஸ்? சென்னை மெரினா கடற்கரையில், ஜெயலலிதாவுக்கு கல்லறை எழுப்ப முடிவு செய்து, நிதி ஒதுக்கீடு செய்த போது, அனைத்து எதிர்க்கட்சிகளும் கண்டனம் தெரிவித்தன, "ஓர் ஊழல் குற்றவாளிக்கு எப்படி மக்களின் வரிப்பணத்தில் கல்லறை கட்டலாம்?" என்று ஒரு படி மேலே போய் ஐயா இராமதாஸ், வடிகட்டிய ஜமுக்காளத்தில் போர்த்தினாலும் ஜெயலலிதாவின் ஊழல் கறை போகாது; அவருக்குக் கல்லறை எப்படி எழுப்பலாம்?" என்று கேள்வி கேட்டவர்தான்.

இந்நிலையில், மருத்துவர் இராமதாஸ் பா.ம.க. கட்சியின் முன்னணியினரைக் கர்நாடக முதலமைச்சர் சித்தஇராமையாவைச் சந்திக்க அனுப்பி வைத்ததுடன், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து குற்றவாளிக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டும் என்று மனு அளித்து வலியுறுத்திட வைத்தார். இப்படிப்பட்ட பாமக கட்சியினுடைய தலைவர் இராமதாஸ், அன்புமணி இராமதாஸ் போன்றவர்கள் எப்படி ஜெயலலிதாவின் படத்தைப் போட்டு அ.தி.மு.க.வினரிடம் வாக்குகள் கேட்க முடியும்? இப்படிப்பட்ட இராமதாசு, அன்புமணி இராமதாசை சொரணையுள்ள அ.தி.மு.க.காரன் கேள்வி கேட்க மாட்டானா? இதையெல்லாம் அ.தி.மு.க.காரன் யோசிக்க மாட்டானா?....

2009 ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையில் கூட்டணி அமைந்த போது, பாமகவைச் சேர்த்து 10 இடங்கள் அளிக்கப்பட்டன. அத்தேர்தலில் போட்டியிட்ட அத்தனை இடங்களிலும் பா.ம.க. தோல்வியுற்றது. எரிச்சல் அடைந்த ஜெயலலிதா, அவருக்கு கூறிய ஒப்பந்தப்படி இராஜ்யசபா எம்பி பதவியும் தரப்படவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆட்சியில் ஊழல் செய்து வரும் கட்சிக்கு ஓட்டு போடாதீர்கள். மாம்பழ சின்னத்திற்கு நீங்கள் எல்லாம் வாக்களிக்க வேண்டும் என்று பேசியுள்ளார் அன்புமணி. 2004-2009 ஆண்டுகளில் ஒன்றிய அமைச்சராக இருந்த அன்புமணி இராமதாஸ் மத்திய பிரதேச ஹிந்தூர் இன்டெக்ஸ் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், உத்தரப் பிரதேசத்தில் உள்ள ரோஹில் கந்த் மருத்துவக் கல்லூரி ஆகிய இரண்டு மருத்துவ கல்லூரிகளுக்குச் சாதகமாகச் சலுகை காட்டி முறைகேடுகள் நடத்தினார் என சிபிஐ பதிவு செய்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. தைலாபுரம் தோட்டத்தில் அவர் போட்ட விருந்து இலைகள் இன்னும் ஈரம் காயவில்லை. அவர் அதிமுகவிடம் கூட்டணி பேசி கொண்டிருந்த நிலையில், மோடியின் பா.ஜ.க. பக்கம் ஏன் சாய்ந்தார் என்பது சாதாரண மக்களுக்குத் தெரியும்.

மாமல்லபுரம் சித்ரா பௌர்ணமி விழாவின்போது (25.04.2013) மரக்காணம் அருகே பாமக உள்ளிட்ட இரு தரப்பினர் மத்தியில் ஏற்பட்ட வன்முறை தாக்குதலால், குடிசைகள், வாகனங்கள் தீவைப்பு, உயிர்ப்பலிகள் ஏற்பட்டன. பலர் கொடுங்காயங்களுடன் உயிருக்குப் போராடிய நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். பேருந்துகள் உடைப்பு, 170க்கும் மேற்பட்ட மரங்கள் வெட்டி சாய்ப்பு, ரூபாய் 600 கோடிக்கு மேல் பொது சொத்துக்கள் சேதம் என்று ஜெயலலிதா அரசு பா.ம.க. மீது வழக்கு போட்டது. சட்டமன்றத்தில் 'மரம் வெட்டிக் கட்சி' என்று பா.ம.க.வை சட்ட சபையில் வசை பாடினார் ஜெயலலிதா.

இந்நிலையில் வழக்கு ஒன்றில் ராமதாசை கைது செய்து வேலூர் சிறையில் வைத்தார். அவர் இதய நோயாளி என்றும் அவரைச் சிறையில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவருடைய மனைவி சரஸ்வதி கடிதம் கொடுத்து முதல்வராக இருந்த ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார். இச் செய்தியைச் சட்ட மன்றத்திலேயே ஜெயலலிதா வெளியிட்டு, 'என்னை வந்து இராமதாஸ் அவர்களுடைய துணைவியார் சந்தித்தார். தன் கணவரை விடுவிக்க வேண்டும் என்று கூறினார். ஆனால் அவர் மீது உள்ள வழக்குகளை அவர் சந்தித்து தான் ஆக வேண்டும். அதனைத் நான் திரும்பப் பெற முடியாது என்று அவரிடம் கூறி விட்டேன் என்று சட்டமன்றத்தில் அறிவித்தவர் தான் ஜெயலலிதா.

இதனால் ஜெயலலிதாவை வீதிக்கு வீதி கூட்டம் போட்டு வசை பாடியவர்கள் இன்றைக்கு அந்த ஜெயலலிதாவினுடைய படத்தைப் போட்டுக் கொண்டு சென்று மாம்பழத்திற்கு வாக்களியுங்கள் என்று கேட்கிறார்கள் அன்பு மணி இராமதாஸ் கூட்டங்கள்.

இது மட்டுமல்ல 1996 களில் அதிமுகவுடன் கூட்டணி வைப்பதில் பேச்சுவார்த்தை முறிந்து போன நிலையில், அப்போது நிருபர்கள் அவரிடம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு, "அ.தி.மு.க.வுடன் இனி கூட்டணி உறவு என்று வைத்துக் கொண்டால், அது ஒரு தாயிடத்தில் மகன் வைத்துக்கொள்ளும் உறவுக்குச் சமம்" என்று கடுமையான சொற்களைப் பயன்படுத்தினார் ஐயா இராமதாஸ் இப்படி எல்லாம் அ.தி.மு.க.வையும் அதன் தலைமையையும் அறுவருக்கத்தக்க மொழியில் பேசி வந்தவர்கள், இன்று அதே ஜெயலலிதா படத்தைத் துண்டுப் பிரசுரங்களில் போட்டுக் கொண்டும், மேடையில் பேனர் சுவரொட்டிகள் வைத்துக் கொண்டும் அதிமுககாரனிடம் மாம்பழத்துக்கு வாக்கு கேட்பது என்பது ஒரு கேலிக்குரிய செயல் அல்லவா?

வன்னியர் சங்கத்தின் முதல் தலைவர் வி.எஸ். இராமமூர்த்தி என்கிற தவத்திரு வன்னிய அடிகளார் அவர்களால் 20.07.1980 இல் வன்னியர் சங்கம் தொடங்கப்பட்டது. ஆனால், அப்படிப்பட்ட அவருக்கு எதிராக கோஷ்டி களேபரம் செய்தவர் தான் இராம்தாஸ். அந்நாளில் டாக்டர் இராமதாஸ் வந்த ஒரு நாள் வருமானம் 500 முதல் 800 வரை தான். "சட்டமன்றத்தையோ நாடாளுமன்றத்தையோ என்னுடைய கால்கள் மிதிக்காது. சங்கத்தின் எவ்விதப் பதவி நான் வகிக்க மாட்டேன்; என் சொந்தச் செலவில் இயக்கப் பணிகள் செய்வேன்" என்று மூன்று சத்தியங்களைச் செய்து விட்டு வன்னியர் சங்கத்தில் இணைந்து ஈடுபட்ட இராமதாஸ், பிற்காலத்தில் மெல்ல, மெல்ல அவர் தன் போக்கை மாற்றிக் கொண்டு மாபெரும் கல்வி நிலையங்கள், தொழில்கள், பினாமி சொத்துக்களுக்கு அதிபர் ஆகிவிட்டார் என வன்னியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களே பிற்காலத்தில் சொல்லத் தொடங்கினர். அது பற்றிய புத்தகங்களை வெளியிட்டுள்ளனர். அவர் கூறிய மிக முக்கியமான அம்சம் "எனது வாரிசுகளோ, எனது சந்ததியினரோ யாரும் எந்தக் காலத்திலும், சங்கத்திலோ (வன்னியர்) அல்லது கட்சியிலோ எந்தப் பதவிக்கும் வர மாட்டார்கள். எனக்கு இந்த நாட்டின் பிரதமர் பதவி கொடுத்தாலும் சரி; சுவிஸ் வங்கியில், ஆயிரம் கோடி ரூபாய் என் பேரில் போடுவதாகப் பேரம் பேசினாலும் சரி; இந்த இராமதாஸ் விலை போக மாட்டான். இது சத்தியம்! என் தாய் மீது சத்தியம்!" என்று பேசினார்.

"அது மட்டும் அல்ல; இதை எல்லாம் உங்கள் டைரியில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்; தாய் மீது செய்து கொடுத்த இந்தச் சத்தியத்தை மீறி நான் நடந்தால் என்னை நடுரோட்டில் நிறுத்தி வைத்துக் சவுக்கால் அடியுங்கள்; "இப்படிப் பேசியவர் தான் நமது ஐயா டாக்டர் இராமதாஸ்: இவருடைய பேச்சுகளை நம்பிய அவருடைய சொந்தங்கள், பிற்காலத்தில் மருத்துவமனைக்கு அங்கும் இங்கும் சிகிச்சைக்காக அலைந்து கொண்டிருந்த காடுவெட்டி குருகளைப் போல, இன்றைக்கு நடுத்தெருவில் பல ஆயிரம் பேர் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். இப்படியாக அவருடைய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களே விமர்சனம் செய்து வருகிறார்கள். அப்படியென்றால் மகன் அன்புமணி இராமதாஸ், மருமகள் சௌமியா அன்புமணி இவர்கள் எல்லாம் யார்? இராமதாஸ் குடும்பம் இல்லையா? என்று பாமக காரன் கேட்பதற்கு பதில் சொல்ல வேண்டும்?

அவர் சொல்கிறார் 'பத்தாயிரம் பேர் கூட இல்லாதவர்கள் தமிழகத்தை ஆளுகின்றனர்' என்பதை உணர்ந்து விக்கிர வாண்டி இடைத்தேர்தலில் பாமகவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். அவர் பேசி இருப்பது யாரை என்று தெரியும். இந்தத் தமிழகத்தை பெரியார் மண்ணில், அண்ணா வழியில், கலைஞர் சமூக நீதி நிலைநாட்ட தன் வாழ்நாள் முழுவதும் இயேசு நாதரை போல சமூக நீதி சிலுவையை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு தமிழ் நாடெங்கும் சுமந்து அலைந்து அலைந்து ஏழை மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைத்தவர் என்பது தெரியும்.

எம்ஜிஆர் ஆட்சியில் வன்னிய பெருமக்களுக்கு இட ஒதுக்கீடு கேட்டுப் போராட்டம் நடத்தினார். துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு போலீசாரின் குண்டுகளுக்கு 21 பேர் இரையாகிப் போனார்கள். திமுக தொண்டனின் இரத்த வேர்வையில் எழுப்பப்பட்ட அண்ணா அறிவாலயம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 இல் திறக்க வேண்டிய அந்நாளில் தொண்டர்கள் வரமுடியாத சூழ்நிலையாகி விட்டது. தென்பகுதியில் இருந்து வரக்கூடியவர்கள் எல்லாம் வன்னியர் போராளிகள் மரங்களை வெட்டிப் போட்டுச் சாலை மறியல் என்று வளைத்த காரணத்தினால் சென்னைக்கு வர இயலவில்லை. அதனால் செப்டம்பர் 16ஆம் தேதி அண்ணா அறிவாலயம் திறக்கப்பட்ட வரலாறு உண்டு.

ஆனால் கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடன் அதிமுக ஆட்சியில் இட ஒதுக்கீட்டுக்காக போராடியவர்களை தீவிரவாதிகள் என்று சொல்லிப் பட்டம் கட்டிய வார்த்தைகளை நீக்கிவிட்டுச் சமூக நீதிப் போராளிகள் என்று கலைஞர் விருது வழங்கினார். ஒவ்வொரு குடும்பத்திற்கு ரூ.மூன்று இலட்சம் வீதம் வழங்கியதுடன் மற்றும் மாதம் தோறும் உதவித் தொகை வழங்கினார். அது இன்றுவரை தொடர்ந்து கிடைத்திட அவர் போட்டிட உத்தரவால் பயனளிக்கிறது.

எம்.ஜி.ஆர் காலத்தில் வன்னிய போராளிகளான 11,000 பேர் மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாவற்றையும் தள்ளுபடி செய்தார். 107 சாதியைச் சேர்ந்த பெருமக்களை 20% இட ஒதுக்கீடு தந்து கல்வி யிலும், வேலை வாய்ப்பிலும் பயன்பெற மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் கொண்டு வரப்பட்டுச் சமூக நீதி கொள்கையை நிலை நாட்டினார் கலைஞர். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்களாக வன்னியப் பெருங்குடி மக்கள் பொறுப்பில் அமர்த்தப்பட்டார்கள். ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் பல்வேறு துறைகளில் அவர்களுக்கு உரிய பொறுப்புகள் வழங்கப்பட்டன. முதலமைச்சர் தளபதி அவர்கள் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு நினைவு மணிமண்டபம் எழுப்பி வருகிறார் ராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு சென்னையிலேயே சிலை வைக்கப்பட்டுள்ளது. தியாகிகளுக்கு நினைவாக மணிமண்டபம் கட்டப்பட்டு இருக்கிறது. அதைப்போல மருத்துவர் இராமதாஸ் அவர்களின் அன்பு மகன் டாக்டர் அன்புமணி இராமதாசுக்கு ராஜ்யசபா சீட்டு வழங்கியும் ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக வருவதற்கும் துணை புரிந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியம், குன்றத்தூர் நகரம், மாங்காடு நகரத்திற்கு ஒதுக்கப்பட்ட தென்பேர் ஊராட்சியில் உள்ள பாகம் எண் 185 ல் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வேம்பி ரவி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம் குன்றத்தூர் நகர கழக செயலாளர் கோ.சத்தியமூர்த்தி, மாங்காடு நகர கழக செயலாளர் எஸ். ஜபருல்லா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் பி.முருகன், எஸ்.எம்.சுகன், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ஜீவிதாரவி, கிளைக் கழக செயலாளர் எம்.சண்முகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி தொகுதியில் - விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர்

# தொல்.திருமாவளவன் எம்.பி. தேர்தல் பிரச்சாரம்!

## கிராமம் கிராமமாகச் சென்று வாக்கு சேகரித்தார்!

விக்கிரவாண்டி, ஜூலை 6-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு அங்கீகாரம் பெற்று தந்தது தி.மு.க. அதற்கு கைமாறாக விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெறுவதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வாக்குகள் சிந்தாமல் வாக்களிக்க வேண்டும் என தொல்.திருமாவளவன் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க. வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியம் நேமூர் கூட்டுச் சாலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன், உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, சிறுகுறு தொழில்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பத்திரப்பதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் மூர்த்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் மேற்கொண்டனர்

அப்போது வாக்காளர்கள் மத்தியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பேசியதாவது

தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கூட்டணி கொள்கை கூட்டணி, கோட்பாடு உள்ள கூட்டணி இந்த கூட்டணி சமூக நீதிக்காக உருவாக்கப்பட்ட கூட்டணி

நடந்து நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இரண்டு தொகுதிகளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தனி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் தி.மு.க.வினர். நமது வெற்றிக்காக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்கள், தி.மு.க.வினர் அயராது தேர்தல் பணியாற்றி நம்மை வெற்றி பெற வைத்துள்ளனர். எனவே தி.மு.க.விற்கு கைமாறு செய்யும் வகையில் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறுத்தியுள்ள வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெற வைக்க வேண்டும்

அதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் தங்களது ஒட்டுமொத்த வாக்கினையும் உதயசூரியன் சின்னத்திற்கு அளித்து அவரை அதிகபட்ச வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் நமது கூட்டணி தான் வெற்றி பெற வேண்டும் முற்போக்கு சிந்தனையுடைய, இடதுசாரி சிந்தனையுடைய ஜனநாயக சிந்தனையுடன் இந்த கூட்டணி வெற்றி பெற வேண்டும். தி.மு.க. தலைவர் தலைமையில் உள்ள இந்தியா கூட்டணி கட்சி தான் தமிழ்நாட்டில் 40க்கு 40 இடங்களில் வெற்றி பெற்று ஒரு பெரிய சாதனை படைத்துள்ளது. தி.மு.க.விற்கும் விடுதலை சிறுத்தைக் கட்சிக்கும் உள்ள உறவு நல்லிணக்க உறவாக தொடர்ந்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒரத்தூர், துறவி ஆகிய இடங்களில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் விழுப்புரம் எம்.பி. ரவிக்குமார், விக்கிரவாண்டி ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன், மாவட்டச் செயலாளர் திலீபன் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், திராவிட இயக்க தீரர் இராசிபுரம் கே.ஆர் (எ) கே.இராமசாமி அவர்களின் 23 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (5.7.2024 வெள்ளிக்கிழமை) மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ராசிபுரம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கே.ஆர் (எ) கே.இராமசாமி அவர்களின் திருவுருவப் படத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், வங்கி செயலாளர் கோவிந்தராஜ், வங்கித் தலைவர் கந்தசாமி ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திருமதி பார்வதி நாராயணசாமி**

**ஜூலை 5 (2023)**



**தனது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கழக மகளிர் அணியில் பணியாற்ற தொடங்கியவர்.**

**வடசென்னை மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறையும், மாவட்ட மகளிர் அணி தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின்சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**